# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

## நாளை முதல் 5 நாட்கள் நடக்கிறது

சென்னை, பிப்.23–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனமும், அப்பல்லோ மருத்துவமனையும் இணைந்து பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச சுகாதார மருத்துவ முகாமை நடத்துகிறது. இந்த முகாம் நாளை(திங்கட்கிழமை) முதல் 28–ந் தேதி வரை 5 நாட்கள் நடைபெற இருக்கிறது. சென்டிரல், ஏ.ஜி.டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் கோபுரம் மற்றும் செனாய்நகர் ஆகிய 12 மெட்ரோ ரெயில் நிலையங்களில் காலை 8 மணி முதல் பிற்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் மருத்துவ முகாம் நடக்க உள்ளது.

இந்த முகாமில் ரத்த அழுத்தம் மற்றும் சீரற்ற ரத்த சர்க்கரை குறித்த பரிசோதனையும் அதுதொடர்பான மருத்துவ ஆலோசனையும் வழங்கப்படும்.

மேற்கண்ட தகவல் மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.